<u>முதன்மை சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

**<u>17.08.2026</u>**

OS. No. 19/2010

பக்கம் –

DW1 – வசந்தா

**<u>வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு தாக்கல் செய்துள்ள மங்கையர்கரசி, பத்மாவதி எனது சகோதரிகள் என்றால் சரிதான். நாங்கள் மூவரில் யார் மூத்தவர் என்றால் நான்தான். 2ம் பிரதிவாதி ஆகிய எனது கணவர் எனக்கு திருமணத்திற்கு முன்பு உறவினரா என்றால் இல்லை. வாதிகள் இந்த தாவா எதற்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வீட்டைகேட்டு தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்துக்கள் 3 ஐட்டச்சொத்துக்கள் என்றும் அந்த சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது அப்பா நீலகண்ட முதலியாருக்கு பாத்தியப்பட்டது. எனது அப்பா நீலகண்ட முதலியாருக்கு அந்த சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா முனுசாமி முதலியார் என்றால் சரிதான். அவரை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது தாத்தா எப்போது காலமானார் என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா முனுசாமி முதலியாருக்கு எனது அப்பா நீலகண்ட முதலியார் மட்டும்தான் வாரிசு என்றால் இல்லை ஒரு தங்கை ரோஸ் உள்ளார். அந்த ரோஸ் காலமாகிவிட்டார். நீலகண்ட முதலியாருக்கு ஒரு தங்கை ரோஸ் உள்ளார் என்ற விவரத்தை எனது எதிருரையில் நான் குறிப்பிடவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்தில் பயிர்வைக்கும் இடத்தில் என் அப்பா நீலகண்ட முதலியார்தான் பயிர் செய்து வந்தார் என்றால் சரிதான். அந்த இடத்திற்கும் பட்டா என் அப்பா பெயரில்தான் இருந்தது என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1969ல் நடைபெற்றது. முதல் வாதி மங்கையர்கரசிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு ஞயாபகம் இல்லை. 2ம் வாதி பத்மாவிற்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு ஞயாபகம் இல்லை. மங்கையர்கரசி, பத்மாவிற்கு திருமணம் நடைபெற்ற காலத்தின் என் அப்பா உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். என் தங்கைகளுக்கு திருமணம் நடைபெற்ற காலத்தில் என் அப்பாதான் தாவா சொத்தில் பயிர்செய்து வந்தார் என்றால் சரிதான். என் அப்பா 1984 ஆம் ஆண்டு காலமானார் என்றால் சரிதான். என் அப்பா காலமான காலத்தில் என் அம்மா வரதாம்மாள் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். என் அப்பா இறந்த காலகட்டத்தில் அப்பாவிற்கு வாரிசுகள் என் அம்மா மற்றும் சகோதரிகள் ஆகிய நாங்கள் மூவரும் என்றால் சரிதான். அப்பா சொத்து வாரிசு என்ற முறையில் எங்கள்

4 பேருக்கும் தான் சொந்தம் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. என் அப்பா, அம்மா உயிருடன் இருந்த காலத்தில் என்னுடன்தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் மங்கையர்கரசி, பத்மாவதி இருவரும் அவ்வப்போது வந்து எங்கள் பெற்றோரை பார்த்து சென்றார்கள் என்றால் சரிதான். அப்போது என் அப்பா என் தங்கைகளிடம் தாவா சொத்தில் எல்லோருக்கும் பாகம் இருப்பதாக சொல்லியுள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. அதுபோல் என் அப்பா தன்னுடைய காலத்திற்கு பிறகு தாவா சொத்தை நாங்கள் நால்வரும் பிரித்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியுள்ளார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. என் அப்பா இறந்த காலத்தில் அவருக்கு வயது சுமார் 70க்கு மேல் இருக்கும் என்றால் சரிதான். அப்போது என் அப்பா வீட்டிலேயே இருந்து வந்தார் என்றும் அவர் வெளியில் செல்லவேண்டும் என்றால் அவருக்கு துணை வேண்டும் என்று சொன்னால் சரிதான். அதனால் என் அப்பாவிற்கு பேப்பரில் இருக்கும் விவரத்தை யாராவது படித்து காண்பித்தால்தான் தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு என் அப்பாவை வீட்டில் இருந்து வெளியே யார் அழைத்து செல்வார்கள் என்றால் எனது கணவர் அழைத்துசெல்வார். அவ்வாறு தான் ஐட்டம் 1,2 ஐ எனது கணவர் என் அப்பாவை வெளியே அழைத்துசென்றிருந்த போது கிரைய பத்திரம் எழுதி வாங்கியிருந்தார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. ஐட்டம் 1,2 ஐ எனது கணவர் எனது அப்பாவிடம் இருந்து கிரையம்பெற்றபோது நான் பதிவு அலுவலகம் சென்றிருன்தேனா என்றால் செல்லவில்லை. EX.A2 கிரைய ஆவணம் பதிவு செய்யப்படும்போது நான் பதிவு அலுலவகம் செல்லவில்லை. அதனால் பதிவு அலுவலகத்தில் யார்யார் இருந்தார்கள் என்றும் அதில் யார் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதனால் EX.A2 பதிவு செய்யப்படும்போது பதிவு அலுவலகத்தில் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். EX.A2 கிரைய ஆவணம் 1980ல் நடைபெற்றது என்றும் அதற்கு முன்னதாகவே எனது தங்கை பத்மாவதிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். அப்போது எனது தந்தை யார்யாரிடம் எவ்வளவு கடன் பெற்றிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. EX.A2வில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காகா எனது அப்பா நீலகண்ட முதலியார் 2ம் பிரதிவாதியாகிய எனது கணவர் தர்மலிங்கத்திற்கு கிரைய ஆவணம் எழுதிகொடுத்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. எனது தந்தை என்னுடன் தங்கியிருந்ததை சாதகமாக எடுத்துக்கொண்டு தவறாக பயன்படுத்தி என் அப்பாவிடமிருந்து EX.A2 கிரைய ஆவணத்தை 2ம் பிரதிவாதியான எனது கணவர் எழுதி

வாங்கிகொண்டார் என்றால் தவறு. எனது தந்தை EX.A2ஐ தவிர வேறு பத்திரம் எழுதிகொடுத்தாரா என்றால் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார். செட்டில்மெண்ட் ஆவணம் எப்போது எழுதிகொடுத்தார் என்றால் 1981ல். இந்த செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிகொடுத்தபோது நான் பதிவு அலுவலகம் சென்றிருந்தேனா என்றால் சென்றிருந்தேன். அந்த செட்டில்மெண்ட EX.A3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த EX.A3ல் நான் சாட்சி கையொப்பம் பெற்றிருந்தேனா என்றால் இல்லை. EX.A3 பதிவு செய்யப்படும்போது பதிவு அலுவலகத்தில் யார்யார் இருந்தார்கள் என்றால் எனக்கு ஞயாபகம் இல்லை. உறவினர்கள் யாரும் இருந்தார்களா என்றால் உறவினர்கள் இல்லை ஆனால் பக்கத்துவீட்டு காரர்கள் பச்சையப்ப முதலியார் மற்றும் பாலு முதலியார் ஆகியோர் பதிவு அலுவலகம் சென்றிருந்தனர். EX.A3ல் யார்யார் சட்சி கையொப்பம் செய்திருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நானே எனது கணவரோ மங்கையர்கரசி மற்றும் பத்மாவதியிடம் செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து ஆட்சேபனை எதுவும் வாங்கினோமா என்றால் இல்லை. EX.A3 செட்டில்மெண்ட் ஆவணம் செய்தபோது எங்கள் இரண்டு தங்கைக்கும் திருமணம் ஆகி அவரது கணவர்கள் இருந்தார்களா என்றால் 2வது தங்கை பத்மாவதிக்கு EX.A3க்கு பிறகுதான் திருமணம் நடைபெற்றது. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும் EX.A3 ஆவணத்தின் முன்பே திருமணம் நடைபெற்றது என்றும் சொன்னால் எனக்கு இது குறித்து கவனம் இல்லை. என் கணவர் மற்றும் எனது தங்கை கணவர்கள் ஆகிய மூவருக்கும் எந்த கெட்ட பழக்கமும் இல்லை என்றால் சரிதான். 3 சகோதரிகள் மாப்பிள்ளைகள் இருக்கும்போது அதில் எனது கணவருக்கு மட்டும் எனது அப்பா EX.A2,EX.A3 எழுதி கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் நானும் எனது கணவரும்தான் என் அப்பாவை கட்டாயப்படுத்தி EX.A2, EX.A3யை எழுதி வாங்கியுள்ளோம் என்றால் தவறு. அதனால் EX.A2, EX.A3 ஆவணங்கள் சட்டப்படி செல்லாது என்றும் அதனால் எனது கணவருக்கு EX.A2, EX.A3 ஆவணத்தின்படி சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. EX.A8 முதல் EX.A12 வரை உள்ள ஆவணங்கள் EX.A2,EX.A3 அடிப்படையில் எழுதி கொடுக்கப்பட்டதால் EX.A8 முதல் EX.A12 வரை உள்ள ஆவணங்கள் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதிகள் தாவா சொத்தில் பாகம் கோரி EX.A4 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். இந்த அறிவிப்பிற்கு EX.A5 பதில் அறிவிப்பு கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் பதில் அறிவிப்பு கொடுத்த பின்புதான் வாதிகளுக்கு EX.A2,EX.A3 எழுதிகொடுக்கப்பட்ட விவரம் தெரியவந்தது என்றும் அதை

பின்னிட்டுதான் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதும் என்றால் சரியல்ல. வாதி EX.A2,EX.A3 தெரிந்தவுடம் இந்த தாவா தாக்கல் செய்துள்ளதால் காலதோசத்தால் இந்த வழக்கு பாதிக்கப்படாது என்றால் சரியல்ல. இன்றைய தேதிவரை தாவா சொத்தில் வாதிகளுக்கு 2/3 பாகம் உள்ளது என்றும் எனவே தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. வாதிகள் இன்றைய தேதிவரை கூட்டுபங்கு வாரிசுகள் என்றவகையில் தாவா சொத்தில்தான் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

Sd/- J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.